செய்தி வெளியீடு எண்: 077 நாள் :30.01.2014

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாட்டில் சிறப்பாக கதர் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்து வரும் சர்வோதய சங்கங்களுக்கு, 20% தள்ளுபடி மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, சிறப்பாக கதர் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்த சர்வோதய சங்கங்களுக்கு 20% தள்ளுபடி மான்யமாக ரூ.2.12 கோடி நிதி ஒப்பளித்து ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமை அலுவலகமான குறளகத்தில் இன்று (30.1.2014) நடைபெற்ற விழாவில், மாண்புமிகு முதலமைச்சரின் உத்திரவுப்படி, மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் அமைச்சர் திரு.டி.பி.பூனாட்சி, அவர்கள் தகுதிபெற்ற 16 சர்வோதய சங்கங்களுக்கும், தள்ளுபடி மான்யத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இவ்விழாவில் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலர் திரு.கா.பாலச்சந்திரன்,இ.ஆ.ப. மற்றும் வாரிய அலுவலர்கள், சர்வோதய சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9